கொத்தவால்சாவடியை நிர்வகித்து வருகிறார்கள். ஆகவே, அதை வேறு இடத்திற்கு மாற்றுவது என்பதை மேற்கொள்ள முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று நெருக்கடியைத் தவிர்க்க வேண்டுமென்ற வகையில், போக்குவரத்தைச் சுலபமாக ஆக்க வேண்டுமென்ற வகையில் பரவலாக சென்னையின் பல்வேறு பகுதிகளில் பெரிய, பெரிய மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதன் மூலம் இந்தப் பகுதிகளில் ஏற்படக்கூடிய நெருக்கடியைத் தவிர்க்க முடியும். அந்த வகையில் வட சென்னையில் ரூளைக்கு அருகே கேசவப் பிள்ளை பூங்கா பகுதியில் 40 லட்சம் ரூபாய் செலவில் மொத்த வியாபாரிகளுக்கும், சில்லரை வியாபாரிகளுக்கும் மார்க்கெட் கட்டப்பட இருக்கிறது. அரசு 20 லட்சம் ரூபாய் செலவு செய்ய அனுமதித்து இருக்கிறது. மீதியை கார்ப்பரேஷன் ஏற்றுக் கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAN : Has the market construction started in Kesava Pillai Park, and is there any proposal to construct a similar market in South Madras because of the expansion of the Madras City and the huge crowd that has to go to the Kesava Pillai Park market? Is there any proposal to decentralise the wholesale market and construct one somewhere in the centre of South Madras?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கேசவப் பிள்ளை மார்க்கெட் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக 20 லட்ச ரூபாய் செலவு செய்ய அரசு அனுமதியளித்திருக்கிறது. தென் சென்னையிலும் அப்படிப்பட்ட ஒரு மார்க்கெட் அமைக்க வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. அதற்கான இடத்தைத் தேடும் முயற்சியில் மாநகராட்சியினர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : There was a proposal to start one at Arumbakkam. If any such market is started in the outskirts of the City, it will relieve the congestion of the lorry traffic in the City. Therefore, will the Government take quick steps to do it.?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் கூற முடியும்.

புத்தூர் சீனிவாசா சுப்பராயா பல்தொழில் பயிற்சிப்பள்ளி.

*** 110 திரு. எஸ். வடிவேல் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி அருகே அமைந்துள்ள புத்தூர் சீனிவாசா சுப்பராயா பாலிடெக்னிக்கை அரசு எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், எப்போது?

1971 ஜூலை 2]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இந்த பல் தொழில் பயிற்சிப் பள்ளியை அரசு எடுத்து நடத்தலாம் என தற்காலிக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(இ) இந்த பல்தொழில் பயிற்சிப் பள்ளிக்குச் சொந்தமான நிலங்கள் கட்டிடங்கள் இதர சொத்துக்கள் யாவற்றையும் அரசுக்கு மாற்றிக் கொடுத்தவுடன் இது பற்றிய முடிவான ஆணை வெளியிடப் படும்.

Starting of Dry-farming in Hosur

* 111 *Q.*—THIRU B. VENKATASAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to start intensive dry farming in Hosur taluk, Dharmapuri district; and

(*b*) if so, when it will be started?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Not only Hosur Taluk, but the entire Dharmapuri District provides ample opportunities and ideal conditions for improving the dry cultivation and also it provides good response. So, may I request the Hon. Minister to state whether the Government are going to have special schemes to improve the dry cultivation there?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒருங்கிணைந்த புன் செய் நில மேம்பாட்டுத் திட்டம் ஒரு மத்திய அரசுத் திட்டமாகும். வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் ஒன்றின் அருகில் இத்திட்டத் தின் முன் மாதிரிப் பகுதி அமைந்திருத்தல் வேண்டும் என்பது நிபந்தனைகளில் ஒன்றாகும். அப்போதுதான், புன்செய்ப் பண்ணை குறித்த ஆராய்ச்சி முடிவுகளையும் புன்செய்ப் பயிர் விளைச்சல் தொடர்பாக எழும் பிரச்சினைகளையும்முறையே ஆராய்ச்சி நிலையத் திலிருந்து அதன் அருகிலுள்ள திட்டப் பகுதிக்கும், திட்டப் பகுதி யிலிருந்து ஆராய்ச்சி நிலையத்திற்கும் தெரிவித்துப் பயனுற இய லும். இந்தத் திட்டம் குறித்து, இந்திய வேளாண்மை ஆராய்ச் சிக் கழகம் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

சுமார் 8,000 ஏக்கர் மொத்தப் பரப்பளவுள்ள நிலம் பயனடைய இந்த முன்னோடித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் இச்சாதனை கிட்டும். முன் னோடித் திட்டம் ஒவ்வொன்றுக்காகவும் இந்திய அரசு சுமார் 25 லட்சம் செலவழிக்கும். மானியங்களும் கடன்களும் இத்தொகை யில் அடங்கும்.